தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-22772060
9443699066

admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தின கனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்



| Vol: 03 | Issue: 238 | 4 Pages | 06.07.2026 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 238 | 4 பக்கங்கள் | 06.07.2026 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**இன்பம் ஒருவற்கு இரத்தல் இரந்தவை**
**துன்பம் உறாஅ வரின்**

**விளக்கம்:**
இரந்துகேட்டபொருள்கள்துன்பமுறாமல் கிடைக்குமானால், அவ்வாறு இரத்தலும் இன்பம் என்று சொல்லத் தக்கதாகும்.

# “தவெக அரசுக்கு கவசமாகவும், கேடயமாகவும் மதிமுக இருக்கும்” வைகோ உறுதி

கோவை

தவெக அரசுக்கு கவசமாகவும், கேடயமாகவும் மதிமுக இருக்கும் என மதிமுக பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

மதிமுக பொதுச்செயலாளர் வைகோ சென்னையில் இருந்து விமானம் மூலம் இன்று (ஜூலை 5) கோவை வந்தார். கோவை விமானநிலையத்தில் இன்று அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: அதிமுகவுக்கு திமுக ஆதரவு அளித்து, பழனிசாமியை முதல்வராக்குவது என்ற நிலைப்பாடு எடுக்கப்பட்டது உண்மை என ஐயூஎம்எல் தலைவர் காதர் மொய்தீன் கூறியுள்ளார். அவ்வாறு எடுத்திருந்தால் அதைவிட பெரிய அரசியல் மோசடி இருக்காது.

அரசாங்கம் செய்ய வேண்டிய வேலைகளை தான் எடுத்துக் கொண்டு, எதுவாக இருந்தாலும் தன்னிடம் கூறலாம் என்று ஆளுநர் கூறுகிறார். அதற்கு ஆளுநருக்கு என்ன அதிகாரம் உள்ளது?. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியாளர்கள் தான் இதனை செய்ய முடியுமே தவிர, ஆளுநரே இதனை செய்வேன் என்றால், இது என்ன ஆளுநர் ஆட்சியா?.

ஆளுநரிடம் திமுக சார்பில் கொடுக்கப்பட்ட ஒரு புகாரில் மாநில ஆட்சியை டிஸ்மிஸ் செய்வதற்கான பிரிவு 356வது பிரிவை



பயன்படுத்த வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அவர் ஏன் அதனை பயன்படுத்த வேண்டும் என்று திமுக நினைக்கிறது?. அப்படி என்றால் ஆளுநர் ஆட்சியை கொண்டு வரவேண்டும் என்று திமுக நினைக்கிறதா?.

குதிரை பேரம் நடக்கிறது என்று திமுகவினர் கூறுகின்றனர். ஒரு முறை கம்பம் தொகுதியில் வென்ற மதிமுக எம்.எல்.ஏ.வை ராஜினாமா செய்ய வைத்து மீண்டும் அவரை திமுக சார்பில் போட்டியிட வைத்து ஜெயிக்க வைத்தது பெருச்சாளி பேரமா?. இது போன்ற குதிரை பேரத்தை தொடங்கி வைத்ததே திமுக தான்.

இதுபோன்றுதான் அனிதா ராதாகிருஷ்ணனையும் அதிமுகவிலிருந்து ராஜினாமா செய்ய வைத்து, பின்னர் திமுகவில் இணைத்து ஜெயிக்க வைத்தனர்.

தவெக ஆட்சி என்ன செய்துவிட்டது என்று திமுகவினர் கேட்கிறார்கள். ஜனநாயகத்தை நாசப்படுத்துகின்ற ஊழல், கமிஷன் கடந்த திமுக ஆட்சியில் நடைபெற்றது. எதற்கெடுத்தாலும் லஞ்சம் கேட்கபட்டதாக கட்சிக்கு அப்பாற்பட்ட நிறுவனதாரர்கள், தொழில் செய்பவர்களே கூறினார்கள். ஆனால், தற்போது இந்த ஆட்சியில் கமிஷன் கேட்கப்படுவது இல்லை. கமிஷன் என்ற பேச்சுக்கே இடமில்லை என்கிறார்கள். கமிஷன், கட்டிங், கரப்ஷன் மீட்கப்பட்டுள்ளது. இதுதான் இந்த அரசின் இமாலய சாதனை.

கூட்டணி தர்மத்திற்கு கட்டுப்பட்டு திமுகவை ஆதரித்து நான் பிரச்சாரம் மேற்கொண்டேன். திமுகவுடன் இருந்து விலகிக் கொள்கிறோம் என்று அறிவித்தவுடன் எங்களது தொண்டர்கள் அனைவரும் ஆர்ப்பரித்து மகிழ்ந்தனர். அதிமுகவிற்கு திமுக ஆதரவு கொடுக்கிறது என்றால் ஏதோ ஒன்று இருக்கிறது.

மேகேதாட்டு அணை குறித்து தூண்டி விடுவதே மத்திய மோடி அரசுதான். இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் மக்கள் கொந்தளித்ததை போல், மத்திய அரசுக்கு ஒரு பயம் வர வேண்டும் என்றால் மொத்த தமிழகமும் கொந்தளித்து எழ வேண்டும். அதற்காக தற்போது அன்புமணி ராமதாஸ் முன்னெடுத்துள்ள முன்னெடுப்பை வரவேற்கிறேன்.

மற்ற கட்சிகளின் எம்எல்ஏக்கள் தவெக அரசுக்கு ஆதரவளிக்கின்றனர். மதிமுகவின் 2 சட்டப்பேரவை உறுப்பினர்கள் மாயமாகி விட்டனர். முதல்வர் விஜய் நடத்துகின்ற இந்த அரசுக்கு எதிர்தரப்பில் இருந்து வரக்கூடிய கணைகளை தடுக்கின்ற கவசமாகவும், கேடயமாகவும் மதிமுக இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## முருங்கவிளை வழியாக மார்த்தாண்டத்துக்கு புதிய பஸ் கலெக்டர், அமைச்சர் பஸ்சில் பயணம் செய்து துவக்கி வைத்தார்



நாகர்கோவில், ஜூலை. 6

குளச்சல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முருங்கவிளை சந்திப்பு, கருங்கி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதி பொதுமக்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், வேலைக்குச் செல்வோர் தங்களின் அன்றாட பயணங்களுக்குப் போக்குவரத்து வசதியின்றி சிரமப்பட்டு வந்தனர்.

இதையடுத்து மாற்றியமைக்கப்பட்ட பேருந்து நேற்று முதல் இயக்கப்பட்டது. இதன் துவக்க நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் பிரதாப் தலைமை வகித்தார். தாரகை கத்பர்ட் எம்எல்ஏ முன்னிலை வகித்தார்.

அமைச்சர் ராஜேஷ்குமார் கொடியசைத்து துவக்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து சுற்றுலாத்துறை அமைச்சர் செ.ராஜேஷ் குமார், மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், குளச்சல் சட்டமன்ற உறுப்பினர் தாரகை கத்பர்ட் ஆகியோர் மாற்றியமைக்கப்பட்ட புதிய பேருந்து சேவையில் பயணச்சீட்டு பெற்று பயணிகளுடன் பயணம் மேற்கொண்டார்கள்.

இந்த பஸ் குளச்சலில் இருந்து ரீத்தாபுரம், பாலபள்ளம், வெள்ளியாவிளை, கருங்கல், திப்பிறமலை தொடக்கப் பள்ளி, எட்டாணி, முருங்கவிளை, கஞ்சிக் குழி, பள்ளியாடி, இரவிபுதூர்கடை, சாங்கை வழியாக மார்த்தாண்டம் செல்லும்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் நாகர்கோவில் மண்டல பொது மேலாளர் பாலசுப்பிரமணியன், உதவி மேலாளர் (வணிகம்) மகேஷ், கல்குளம் வட்டாட்சியர் ராஜேஷ், துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.




## கோவை சகோதயா பள்ளிகளின் 47வது மினி மாரத்தான்

சமூகப் பொறுப்புணர்வு, ஒற்றுமை மற்றும் உறுதியை வெளிப்படுத்தும் வகையில், கோவை நேரு விளையாட்டு வளாகத்தில் "போதைப் பொருளுக்கு எதிராக ஓடுவோம்" என்ற கருப்பொருளில் மாபெரும் மினி மாரத்தான் போட்டியை வெற்றிகரமாக நடத்தியது. ஆரோக்கியமான, போதைப்பொருள் இல்லாத சமுதாயத்தை உருவாக்கும் நோக்கில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்வில், 60 பள்ளிகளைச் சேர்ந்த 1,300 மாணவ, மாணவியர் உற்சாகத்துடன் பங்கேற்றனர்.

மாரத்தான் போட்டி 12, 14, 16 மற்றும் 19 வயதுக்குட்பட்டோர் என நான்கு வயது பிரிவுகளிலும், ஆண்கள் மற்றும் பெண்கள் என தனித்தனியாக நடத்தப்பட்டது. மாணவர்கள் "போதைப்பொருளுக்கு இல்லை" என்ற முழக்கத்துடன் பதாகைகளை ஏந்தி, ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்களுடன் உற்சாகமாக ஓடி, ஆரோக்கியமான வாழ்க்கை முறையை ஊக்குவிக்கும் வலுவான செய்தியை பொதுமக்களிடம் கொண்டு சென்றனர்.

இந்த நிகழ்வை கோவை மாநகர காவல்துறையின் துணை ஆணையர் ஆர் கோகுலகிருஷ்ணன் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு கொடியசைத்து தொடங்கி வைத்தார். அவர் பேசுகையில், "போதைப் பொருள் ஒருவரின் வாழ்க்கையை மட்டுமல்ல, ஒரு குடும்பத்தையே சீரழிக்கிறது. இன்று நம் குழந்தைகள் உடல்நலத்திற்காக ஓடினால், நாளை அவர்கள் போதைப்பொருளை நோக்கி ஓடமாட்டார்கள்" என்று தெரிவித்தார். இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக VGM ஹாஸ்பிடல் இயக்குநர் சுமன் கலந்து கொண்டார்.

மேலும் சகோதயா பள்ளியின் தலைவர் நவமணி, துணைத் தலைவர் டாக்டர் ஞானபாண்டிதன், பொதுச்செயலாளர் அரசுபெரியசாமி, இணைச் செயலாளர் டாக்டர் சாம்சன் செல்லதுரை, துணை செயலாளர் டாக்டர் அபிஷேக் பால் ஜாக்சன், சந்திரன் ஆகியோருடன், குழு உறுப்பினர்களான பிரேமா, சார்லின் மதிசெல்வி உள்ளிட்டோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர். பின்னர் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில், ஒவ்வொரு பிரிவிலும் சிறப்பாகச் செயல்பட்ட மாணவர்களுக்குப் பரிசுகளும் கோப்பைகளும் வழங்கப்பட்டன.

## கூட்டுறவு பால் கொள்முதல் சங்கத்தில் ரூ.22 லட்சம் மோசடி: 4 பேர் பணியிடை நீக்கம்

திருப்பூர்,

திருப்பூர் மாவட்டம் அவினாசியை அடுத்த துலுக்கமுத்தூர் ஊராட்சியில் கூட்டுறவு பால் கொள்முதல் சங்கம் செயல்பட்டு வருகிறது. இந்த சங்கத்தில், துலுக்கமுத்தூர் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதி விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த சங்கத்தில், பால் கொள்முதலில் லட்சக்கணக்கில் முறைகேடு நடந்து இருப்பதாகவும், இது குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், கடந்த 2025 ம் ஆண்டு கலெக்டர் அலுவலகத்தில் பொதுமக்கள் மனு கொடுத்தனர்.

இதுகுறித்து விசாரிக்க கலெக்டர் உத்தரவிட்டார். அதன்படி திருப்பூர் பால்வளத்துறை அதிகாரிகள் துலுக்கமுத்தூர் கூட்டுறவு பால் கொள்முதல் சங்கத்துக்கு வந்து விசாரணை நடத்தினர். இதையடுத்து விசாரணை அறிக்கை கடந்த மார்ச் மாதம் 3ந் தேதி கலெக்டரிடம் சமர்ப்பிக்கப்பட்டது. அந்த அறிக்கையில் கூட்டுறவு பால் கொள்முதல் சங்கத்துக்கு ரூ.21 லட்சத்து 91 ஆயிரம் நிதி இழப்பு ஏற்பட்டது உறுதி செய்யப்பட்டது.

இதில் பதிவேடுகளில் முறைகேடாக பால் அளவுகளை வரவு வைத்த தன் பெயரில் ரூ.12 லட்சத்து 47 ஆயிரம், போலி அளவுகளை காட்டியதன் மூலம் ரூ.6லட்சத்து 79 ஆயிரம், மற்றும் உள்ளூர் பால் விற்பனையில் செய்யப்பட்ட முறைகேடுகளால் ரூ.2 லட்சத்து 65 ஆயிரம் இழப்பு ஏற்பட்டு இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த நிதி இழப்புக்கு முன்னாள் செயலர் துரைசாமி, விரி வாக்க அலுவலர் அசோக்குமார், மற்றும் பால் பரிசோதகர் குப்புசாமி ஆகியோர்தான் காரணம் என்றும், இந்த 3 பேரும் தான், முழு பொறுப்பு என விசாரணை அதிகாரி தனது அறிக்கையில் தெரிவித்து இருந்தார். இதற்கிடையில் பொதுமக்கள் கொடுத்த புகார் தொடர்பாக விசாரணையில் இருந்து தப்பிக்க கூட்டுறவு பால் சங்க, பால் பரிசோதகரின் உதவியாளர் ஜெயக்குமார் முறைகேடு ஆதாரங்களை அழிக்கும் விதமாக பேசிய ஆடியோ வெளியானது.

இதையடுத்து முன்னாள் செயலர் துரைசாமி, விரிவாக்க அலு வலர் அசோக்குமார், பால் பரிசோதகர் குப்புசாமி மற்றும் உதவியாளர் ஜெயக்குமார் ஆகிய 4 பேரையும் பணியிடைநீக்கம் செய்து, திருப்பூர் பால்வளத்துறை துணை பதிவாளர் சபரிநாதன் உத்தரவிட்டுள்ளார். இவர்களிடம் இருந்து நிதி இழப்பு தொகை ரூ.21 லட்சத்து 91 ஆயிரத்தை முழுமையாக வசூல் செய்ய 'தண்டவசூல்' மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என துணை பதி வாளர் தெரிவித்தார்.



குன்னூர் பரசுராம் தெரு உமரி காட்டேஜ் பகுதியில் த.வெ.க. வார்டு நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் கிழக்கு நகர செயலாளர் பேரெக்ஸ் தாஸ் தலைமையில் இணை செயலாளர் நெஸ்ட் தாஸ், நகர பொருளாளர் தேவா டேனியல் செயற்குழு உறுப்பினர் ஜெரால்டு ஆகியோர் தலைமையில் நடைபெற்றது நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை கிளை செயலாளர் அப்துல்லா செய்திருந்தார்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், முன்னாள் படைவீரர்கள் நலத்துறை சார்பாக, முன்னாள் படைவீரர்கள் அவர்தம் சார்ந்தோர்களுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார்.8 முன்னாள் படைவீரர்கள் அவர்தம் சார்ந்தோர்களுக்கு ரூ.3 இலட்சத்து 63 ஆயிரத்து 200 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது .உ.முருகேசன், கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் .ஷாஜகான், முன்னாள் படைவீரர் நலத்துறை துணை இயக்குநர் லெப் கர்னல்.அருள்மொழி ஓய்வு உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## கடுக்காம்பாளையம் ஊராட்சியில் பல்வேறு கட்சியிலிருந்து விலகி தவெக வில் இணைந்தனர்



ஈரோடு மாவட்டம் அந்தியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கடுக்காம்பாளையம் ஊராட்சியில்பல்வேறு கட்சியிலிருந்து விலகிதமிழக வருவாய் துறை அமைச்சர் கே. ஏ. செங்கோட்டையன் முன்னிலையில் தவெக வில் இணைந்தனர்

நிகழ்ச்சியானதுகோபி வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் நவீன் குமார், கோபி ஊராட்சி ஒன்றிய கவுன்சிலர் பொலவகாளிபாளையம் இளங்கோவன் ஆகியோர் தலைமையில் கடுக்கம்பாளையம் த வெக நிர்வாகி சி.சாமிநாதன் ஏற்பாட்டில் நடந்தது. இதில் திமுக வடக்கு ஒன்றிய ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளரும், ஒன்றியகவுன்சிலருமானபி.ஜி.வீரன், பழையூர் பகுதி கிளை செயலாளர் ரகுபதி, வஞ்சிமூப்பன் புதூர் பகுதி செயலாளர் பழனிச்சாமி, சி எஸ் ஐ பகுதி தொழிற்சங்க நிர்வாகி குமார், மற்றும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் திமுக மற்றும் அதிமுகவிலிருந்து விலகி

தவெக வில் தங்களை இணைத்துக் கொண்டனர். இதில் கடுக்காம்பாளையம் கிளையைச் சார்ந்த வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் பார்த்திபன், ஒன்றிய மகளிரணி செயலாளர் சவிதா, கடுக்காம்பாளையம் செயலாளர் மூர்த்தி மற்றும் கே.எஸ். தரணிதரன், ராஜலிங்கம், முருகேசன், சரவணன், பழையூர் பகுதி செயலாளர் ஈஸ்வரன், டெய்லார் ஈஸ்வரன் சங்கர், வெங்கடாசலம் ஆகியோர் கலந்து கொண்டனர்

# திருமண விழாவில் ஒரே மேடையில் உதயநிதி, சீமான்... கட்டியணைத்து நலம் விசாரிப்பு

சென்னை, ஜூலை 6

திமுக நிர்வாகி இல்ல திருமண விழாவில் உதயநிதி ஸ்டாலின், சீமான் கலந்து கொண்டனர்.

திமுக தலைமை நிலைய யச்செயலாளர்துறைமுகம் காஜாவின் இல்லத் திருமண விழா சென்னை திருவேற்காட்டில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் நாதக ஒருங்கிணைப்பாளர்சீமான்ஆகிய இரு தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதனடிப்படையில், விழாவில் கலந்துகொள்ள இருவரும் வருகை தந்தனர்.

ஒரே மேடையில் உதயநிதி, சீமான்...

திருமண விழாவில் உதயநிதி ஸ்டாலினும், சீமானும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டபோது,



அரசியல் முரண்பாடுகளைத் தாண்டி இருவரும் நெகிழ்ச்சியுடன் கட்டியணைத்துத் தங்களது அன்பைப் பரிமாறி நலம் விசாரித்துக் கொண்டனர். சீமானை பார்த்ததும் அவர் கைகளை பற்றியபடி நாற்காலியில் அமர உதயநிதி அழைத்துச்சென்றார். பின்னர் இருவரும் அங்கு போடப்பட்டிருந்த சோபாவில் அருகருகே அமர்ந்து சிரித்து கொண்டே சிறிது நேரம் உரையாடினர்.

பொதுக்கூட்டங்களிலும் ஊடகங்களிலும் ஒருவர் மீது ஒருவர் கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வரும் நிலையில், இந்த திடீர் சந்திப்பு மற்றும் அவர்கள் காட்டிய அரசியல் நாகரிகம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. கடந்த சில தினங்களுக்கு முன்பு தான் புதுச்சேரியில் நடைபெற்ற ஒரு திருமண விழாவில் சீமானும் மு.க.ஸ்டாலினும் சந்தித்து பேசியது குறிப்பிடத்தக்கது.

காவல் அரணாக திமுக

திருமண விழாவில் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

இஸ்லாமியர்களுக்கும் கழகத்துக்கும் இடையிலான உறவை யார் நினைத்தாலும் பிரிக்க முடியாது; யார் என்ன சொன்னாலும், எந்த அவதூறுகளைப் பரப்பினாலும் சிறுபான்மை மக்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் காவல் அரணாக திமுக நிற்கும்.

சிலர் சோபா வந்தவுடன் திமுகவை விட்டுச் சென்றுள்ளனர்; தமிழ்நாட்டில் என்ன நடந்தாலும் கண்டு கொள்ளாத அரசாக உள்ளது தவெக அரசு. தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் பேரழிவில் இருந்து தமிழ்நாட்டை திமுகவும், மு.க.ஸ்டாலினும் நிச்சயம் மீட்பார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

# லாரி தொழிலாளர்களின் பிரச்சினையை உடனடியாக சரி செய்ய வேண்டும்: ஈ.ஆர். ஈஸ்வரன்



சென்னை, ஜூலை 6

கொங்குநாடு தேசிய மக்கள் கட்சி தலைவர் ஈ.ஆர். ஈஸ்வரன்வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

இந்தியாவிலேயே லாரி தொழிலுக்கு முன்னோடியாக இருக்கும் மாவட்டம் நாமக்கல். நாமக்கல், சங்ககிரி, திருச்செங்கோடு உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் லாரி தொழிலில் அதிக அளவில் ஈடுபட்டிருக்கிறார்கள். கொங்கு மண்டலத்தில் பிரதான தொழிலாகவே லாரி தொழில் இருந்து வருகிறது. குறிப்பாக நாமக்கல்லில் இந்தியாவில் இருந்து எந்த தொழிற்சாலைகளுக்கு பொருட்கள் ஏற்றி செல்ல வேண்டும் என்றாலும் அதற்கு உண்டான கனரக வாகனங்களின் பிரசித்தி பெற்ற இடமாக நாமக்கல் திகழ்கிறது. அது மட்டுமின்றி தென்னிந்தியாவிற்கு சப்ளை செய்யப்படும் சமையல் கேஸ் வாகனங்கள் எல்பிஜி லாரிகள் நிறைந்த பிரதான பகுதியாகவும் நாமக்கல் உள்ளது. இம்மாவட்டத்தை சேர்ந்த திருச்செங்கோடு ரிக் வாகனங்கள் அகில உலக அளவில் தன் ஆதிக்கத்தை செலுத்தும் சிறப்பு மிக்க பகுதியாகவும் உள்ளது. அதேபோல சேலம் மாவட்டம், சங்ககிரியில் பொருட்களை ஏற்றிச் செல்லும் டாரஸ் லாரிகள் நிறைந்த பகுதியாகவும் உள்ளது. இதுபோல் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் லாரி தொழிலை நம்பி பல லட்சக்கணக்கான குடும்பங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் வாழ்ந்து வருகின்றனர். இத்தொழிலை நம்பி அரசு வங்கிகள், அரசு உதவி பெறும் வங்கிகள், தனியார் நிதி நிறுவனங்கள் லாரிகள் மூலம் வருவாய் ஈட்டி வருகிறது. இவ்வளவு சிறப்பும், பலமும் கொண்ட லாரி தொழில் பிற தொழில்களை காட்டிலும் அரசுக்கு முன்கூட்டியே வரி செலுத்தி வருமானத்தை தருகிற நிலையில் இருக்கிறது. இத்தொழில் நன்றாக இருந்தால் தான் நடுத்தர ஏழை மக்கள் பயன்படுத்தும் அன்றாட பொருட்களின் விலையை கட்டுக்குள்கொண்டுவரஇயலும். அதனால்தான் போக்குவரத்து துறைக்கு என்று தனியாக அமைச்சகம் செயல்படுகிறது.

லாரி தொழிலில் உதிரி பாகங்கள் விலை உயர்வு, வளைகுடா போரின் காரணமாக டீசல் விலை உயர்வு, ஆன்லைன் வரிவிதிப்பு, காலாவதியான சுங்கச்சாவடி, நடைமுறையில் உள்ள சுங்கச்சாவடி, ஜிபிஎஸ் (வாகன கண்காணிப்பு கருவி) கட்டாயம் பொருத்த வேண்டும் என்ற உத்தரவு, ஓட்டுனர்கள் பற்றாக்குறை போன்றவற்றால் லாரி தொழில் பாதிப்படைந்து இருக்கிறது. இதனைத் தாண்டி இன்றைய லாரி உரிமையாளர்களின் கோரிக்கையான FC மற்றும் புதிய வாகனங்கள் பதிவு செய்யும் RC உள்ளிட்ட ஆவணங்கள்தபால் வழியில் தருவதை தவிர்த்து முன்பு போல் நேரடியாக தர வேண்டும் என்ற கோரிக்கை இப்படி எத்தனையோ கோரிக்கைகளை லாரி உரிமையாளர்கள் வைத்துக் கொண்டிருக்க அவர்களுக்கும் அரசுக்கும் ஏதோ ஒரு இணைப்பு இல்லாமல் மாற்றாந்தாய்பிள்ளைகள் போல் அரசு வருவாயை பெற்றுக்கொண்டு லாரி உரிமையாளர்களை கண்டுகொள்ளாத நிலையில் உள்ளது.

இதனைப் போக்க லாரி சங்கங்களுடன் போக்குவரத்து துறை அமைச்சர் இணக்கமான போக்கை கையாள வேண்டும். இப்பொழுது புதிதாக பொறுப்பேற்றுள்ள அதுவும் போக்குவரத்து நகரத்தின் மையப் பகுதியில் உள்ள போக்குவரத்து துறை அமைச்சர் தான் பொறுப்பேற்றதிலிருந்து லாரி சங்கங்களை சந்திக்கவே இல்லை. சம்பந்தப்பட்ட லாரி தொழில் பிரச்சினைகளைப் பற்றி ஆய்வுக் கூட்டங்களை உடனே நடத்த வேண்டும். லாரி சங்கங்களையும், துறை அதிகாரிகளையும் அழைத்து கருத்துக்களைக் கேட்டு பிரச்சினைகளை தீர்க்க அமைச்சர் முயற்சிக்க வேண்டும். போக்குவரத்து துறை அமைச்சர் இதற்கு மேலும் தாமதிக்காமல் லாரி தொழிலை காப்பாற்ற முன்வர வேண்டும். லாரிபோக்குவரத்தை நம்பி பல்வேறு துறை சார்ந்த தொழில்களும் இயங்குகின்ற காரணத்தால் ஏற்படுத்தும் தாமதம் மற்ற தொழில்களையும் பாதிக்கும். தமிழகத்தினுடைய பொருளாதார வளர்ச்சி தடைபட முக்கிய காரணமாக இது அமைந்து விடும். போக்குவரத்து துறை எந்த அளவிற்கு பயணிகள் பேருந்து மீது கவனம் செலுத்துகிறதோ அதைவிட அதிகமான கவனத்தை லாரி போக்குவரத்தின் மீதும் செலுத்த வேண்டும். தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி தன் கையில் இருக்கிறது என்பதை உணர்ந்து போக்குவரத்து துறை அமைச்சர் துரிதமாக செயல்பட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஷ்யாமா பிரசாத் முகர்ஜியின் அர்ப்பணிப்பும், தியாகமும் நமக்கு வழிகாட்டியாக திகழும் எல். முருகன்

சென்னை, ஜூலை 6

ஷ்யாமாபிரசாத்முகர்ஜி, இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தை சார்ந்த கல்வியாளர், வழக்கறிஞர் மற்றும் அரசியல்வாதி ஆவர். நேருவின் முதல் மந்திரி சபையில் வணிகம் மற்றும் தொழில் துறை மந்திரியாக, இருந்தவர்.

நேருவின் அமைச்சரவையில் அமைச்சராக இருந்த இவர், லியாகத்,நேரு ஒப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து 1950 ஏப்ரல் 6இல் மந்திரி பதவியிலிருந்து விலகினார். பின்னர், 1951ஆம் ஆண்டில் ஆர்.எஸ்.எஸ் ஆதரவுடன் 'பாரதிய ஜன சங்கம்' என்ற அரசியல் கட்சியை தொடங்கினர்.

ஷ்யாமா பிரசாத் முகர்ஜியின் அர்ப்பணிப்பும், தியாகமும் நமக்கு வழிகாட்டி




யாக திகழும் என மத்திய இணை மந்திரி எல்.முருகன் தெரிவித்துள்ளார். இது குறித்து தனது எக்ஸ் தளப்பதிவில் தெரிவித்திருப்பதாவது:

பாரதத்தின் தலைசிறந்த தேசபக்தரும், சிறந்த சிந்தனையாளரும், பாரதிய ஜனசங்கத்தின் நிறுவனருமான டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜியின் 125வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்டம், நங்கநல்லூரில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் கலந்து கொண்டேன். டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜி நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாடு மற்றும் தேசிய முன்னேற்றத்திற்காக ஆற்றிய அர்ப்பணிப்பும், தியாகமும் என்றும் நமக்கு வழிகாட்டியாக திகழும்.

இந் நிகழ்ச்சியில் சென்னைகிழக்குமாவட்ட தலைவர் குமார், மாநில செயற்குழு உறுப்பினர் தனசேகர், மாவட்ட, மண்டல் நிர்வாகிகள் மற்றும் கட்சி தொண்டர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரதத்தின் தலைசிறந்த தேசபக்தரும், சிறந்த சிந்தனையாளரும், பாரதிய ஜனசங்கத்தின் நிறுவனருமான டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜி அவர்களின் 125வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, @BJP4TamilNadu சென்னை கிழக்கு மாவட்டம், நங்கநல்லூரில் நடைபெற்ற கருத்தரங்கத்தில் கலந்து கொண்டேன்.

# போட்டி அரசாங்கம் நடத்த முயல்கிறார் கவர்னர் அர்லேகர் சி.பி.ஐ. விமர்சனம்



சென்னை, ஜூலை 6

சென்னை கிண்டியில் உள்ள மக்கள் மாளிகையில் நேற்று நடந்த புத்தக வெளியீட்டு விழாவில் கவர்னர் அர்லேகர் பேசுகையில், "மக்கள் பிரச்சினைகளுக்காக போராடுபவர்கள் தங்களுக்கு உதவி வேண்டுமெனில் கவர்னர் மாளிகையை அணுகலாம். நீங்கள் என்னிடம் அளிக்கும் கோரிக்கைகளை தமிழக அரசிடம் கொண்டு சென்று தீர்வுகான அறிவுறுத்துவேன். கவர்னரிடமும் அரசிடமும் எதிர்பார்ப்பு இருந்தால் கூறுங்கள். ஒன்றிணைந்து மக்களுக்காக செயல்படுவோம்.

வாக்களித்த மக்களால் பிரச்சினைகளை உணரமுடியும், தீர்வு சொல்லவும் முடியும். என்னிடம் தீர்வுகளை சொன்னால் நான் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்அமைச்சரிடம் சொல்வேன். நமது சமுதாயத்தில் சமூக நல்லிணக்கம் இல்லாமல் போனது தான் மிகப்பெரிய பிரச்சினை" என்று தெரிவித்திருந்தார். இது தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில் போட்டி அரசாங்கம் நடத்த கவர்னர் அர்லேகர் முயல்வதாக சி.பி.ஐ. விமர்சனம் செய்துள்ளது.

இது தொடர்பாக சி.பி.ஐ. மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

மக்கள் தங்களது பிரச்சனைகளுக்கு தீர்வுகாண கவர்னர் மாளிகையை அணுகலாம், கோரிக்கைகளை கவர்னர் மாளிகையில் தெரிவிக்கலாம் என நூல் வெளியீட்டு விழாவில் கவர்னர் ராஜேந்திர அர்லேகர் பேசியதற்கு இந்திய கம்யூனிஸ்டு கண்டனம் தெரிவிக்கிறது.

இது, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் ஆட்சிக்கு எதிராக, ஒரு போட்டி அரசாங்கம் நடத்தும் பகிரங்க அறிவிப்பாகும்; கவர்னரின் அத்துமீறலை தடுத்து நிறுத்த, ஜனாதிபதி தலையிட வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 17 வயது சிறுமியை திருமணம் செய்த வாலிபர் மீது போக்சோ வழக்கு




சேலம், ஜூலை 6

சேலம் பகுதியை சேர்ந்தவர் மாயவன் (வயது 22), தொழிலாளி. இவர் கடந்த 2025ம் ஆண்டு 17 வயது சிறுமியை காதலித்து திருமணம் செய்து கொண்டார். இதன்காரணமாக அந்த சிறுமி 4 மாதம் கர்ப்பமாக உள்ளார். இதையடுத்து சிறுமி சேலத்தில் உள்ள அரசு மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக சென்றுள்ளார்.

அப்போது இதுகுறித்து டாக்டர்கள் மருத்துவமனையின் குழந்தைகள் நலமையத்திற்கு தகவல் தெரிவித்தனர். இதனை தொடர்ந்து மேட்டூர் அனைத்துமகளிர்போலீஸ் நிலையத்தில் மாயவன் மீது புகார் அளிக்கப்பட்டது.

அதன் பேரில் அனைத்து மகளிர் போலீசார், மாயவன் மீது போக்சோ வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திம்பம் மலைப்பாதையில் சிறுத்தை நடமாட்டம்: வாகன ஓட்டிகளுக்கு வனத்துறையினர் எச்சரிக்கை!

ஈரோடு, ஜூலை 6

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தின் திம்பம் மலைப்பாதையில் சிறுத்தை ஒன்று சாலையோரம் சாவகாசமாக நடந்து சென்ற காட்சி சமூக வலைதளங்களில் பரவி வாகன ஓட்டிகள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. சத்தியமங்கலம் புலிகள் காப்பக வனப்பகுதியில் யானை, புலி, சிறுத்தை, கரடி, மான், காட்டெருமை உள்ளிட்ட ஏராளமான வன விலங்குகள் வசித்து வருகின்றன. குறிப்பாக யானைகள் அதிக அளவில் காணப்படுகின்றன. இந்நிலையில், திம்பம் மலைப்பாதையில் கார் ஒன்று சென்று கொண்டிருந்த போது, திடீரென சாலையோரம் சிறுத்தை ஒன்று தோன்றியது. பின்னர் அது அமைதியாக சாலையோரம் நடந்து சென்றது. சிறுத்தையை பின்தொடர்ந்த வாகன ஓட்டி, பாதுகாப்பான தூரத்தை கடைப்பிடித்து மெதுவாக காரை இயக்கினார். சிறிது நேரம் சாலையோரம் நடந்து சென்ற சிறுத்தை, பின்னர் தடுப்புச் சுவரை தாண்டி மீண்டும் வனப்பகுதிக்குள் சென்றது. இந்த அரிய காட்சிகளை வாகன ஓட்டி தனது செல்போனில் வீடியோவாக பதிவு செய்து சமூக வலைதளங்களில் பகிர்ந்துள்ளார். அந்த வீடியோ தற்போது பரவி வரும் நிலையில், திம்பம் மலைப்பாதையில் பயணிக்கும் வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என வனத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

# திமுகவின் ஆட்சி தமிழகத்தின் பேரிடர் காலம் தவெக ஐடி விங் விமர்சனம்

சென்னை, ஜூலை 6

தவெக ஐடி விங் எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

"இப்போது ஏற்பட்டுள்ள இந்த அரசியல் பேரிடர் காலத்தில்..." என்று திருவாய் மலர்ந்திருக்கும் உதயநிதி அவர்களே, எது பேரிடர் காலம் என்று பார்ப்போமா?

அண்ணா உருவாக்கிய கட்சியை அவரது குடும்பத்தைக்கூட ஒதுக்கித் தள்ளிவிட்டு, ஐம்பெரும் தலைவர்கள் வரிசையில்கூட இடம் பெற்றிராத ஒரு குடும்பம் மட்டுமே கைப்பற்றியதே, அதுதான் தமிழக அரசியலுக்கு ஏற்பட்ட பேரிடர் காலம்.

அண்ணாவிற்குப் பிறகு கலைஞரை முதல் அமைச்சராகவும் தலைவராகவும் ஆக்கப் பேருதவியாக இருந்த எம்.ஜி.ஆரை நன்றி விசுவாசமின்றி தூக்கி வீசிய ஒரு குடும்பத்தால் உருவானதுதான் தமிழக அரசியலுக்கு ஏற்பட்ட



பேரிடர் காலம்.

திருட்டு மாடல் திமுகவின் ஆட்சிக் காலம் முழுவதும் தமிழகத்திற்கும் தமிழக மக்களுக்கும் ஏற்பட்டதுதான் பேரிடர் காலம்.

ஆட்சி அதிகாரத்தை வைத்துக் கொள்ளை அடித்த தீயசக்தி திமுகவிற்கு, அரசியலில் கொள்ளை அடிக்க இயலாத நிலையை உண்டாக்கிய தமிழக வெற்றிக் கழகத்தின் வருகைதான் திமுகவிற்கான அரசியல் பேரிடர் காலம்.

லஞ்சம், ஊழலற்ற நிர்வாகத்தை உருவாக்கி வரும் எங்கள் வெற்றித் தலைவர் தலைமையிலான மனசாட்சி உள்ள மக்களாட்சிதான் தீயசக்தி திமுகவிற்கான அரசியல் பேரிடர் காலம்.

அடித்த கொள்ளையால் அகப்பட்டு, தலைமறைவாகவும் வெளிநாட்டு மருத்துவமனைகளிலும் பதுங்கித் திரியும் திமுகவின் முன்னாள் அமைச்சர்களுக்கும் தான் இது அரசியல் பேரிடர் காலம்.

திமுக முன்னாள்அமைச்சர்கள் சிக்கினால், முக்கிய குடும்பமும் சிக்கி, திக்கித் திணறுமோ என்பதுதான் தீயசக்தி திமுகவிற்கான அரசியல் பேரிடர் காலம்.

இப்படி தீயசக்தி திமுகவால் தமிழக அரசியலுக்கும் தமிழக மக்களுக்கும் பேரிடர் காலம் ஏற்பட்டதும் உண்மை. ஆட்சியில் இருந்தபோது அடித்த கொள்ளைகளால் திமுகவிற்கும் இப்போது பேரிடர் காலம் ஏற்பட்டு இருக்கிறது என்பதும் உண்மை. ஆனால், எங்கள் வெற்றித் தலைவர் தலைமையிலான மனசாட்சி உள்ள மக்களாட்சியின் காரணமாக, தீயசக்தி திமுகவால் ஏற்பட்ட பேரிடர் விலகி, தமிழக மக்களுக்குப் பெருமகிழ்ச்சி ஏற்பட்டுள்ள காலமிது. அந்த வகையில், தீதும் சூதும் நிறைந்த திமுகவிடம் இருந்து தப்பிய தமிழக மக்களுக்கு இது அழகிய தென்றல் காலம். அகமகிழும் பேரின்ப காலம். ஆனால், தீயசக்தி திமுகவிற்கு இது பேரிடர் காலம்தான். அதில் சந்தேகமேஇல்லை. எப்படியோ இப்படி உளறியாவது உண்மையை ஒப்புக்கொண்ட உதயநிதிக்கு வாழ்த்துகள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மகளிருக்கு ரூ.2,500 வழங்குவது உறுதி அமைச்சர் ஜெகதீஸ்வரி

விருதுநகர் ஜூலை 6

கண்டிப்பாக ரூ.2,500 மகளிர் உரிமை தொகை வழங்கப்படும் என அமைச்சர் ஜெகதீஸ்வரி உறுதி அளித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள ராஜபாளையத்தில் முதல்அமைச்சர் ஜோசப் விஜயின் பிறந்த நாள்விழாவைமுன்னிட்டு கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமை துறை அமைச்சர் ஜெகதீஸ்வரி கலந்துகொண்டார். விழாவில் அவர் பேசியதாவது:

தவெக ஆட்சி என்பது மக்களுக்கான ஆட்சி தவெக ஆட்சியில் ஒரு சதவீதம் கூட ஊழல் இருக்காது. மக்கள் சேவைக்காக பணத்தின் அடிப்படையில் அதிகாரிகள் யாராவது மக்களை அணுகினால் உடனடியாக தகவல் தெரி




வியுங்கள்.

தவறு செய்தது உறுதி செய்யப்பட்டால் விசாரணை இன்றி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். 100 சதவீதம் ஊழலில்லா ஆட்சியை அமைக்க வேண்டும் என்ற முதல்அமைச்சரின் விருப்பத்தை நிறைவேற்ற பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

தற்போது 1000 ரூபாய் மகளிர் உரிமைத்தொகை வழக்கமாக வழங்கப்பட்டு வருகிறது. 2,500 ரூபாய் மகளிர் உரிமை தொகை உயர்த்தி வழங்கிடுவதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கண்டிப்பாக 2500 ரூபாய் மகளிர் உரிமை தொகை வழங்கப்படும். கடந்த ஆட்சியில் விண்ணப்பித்தவர்களுக்கு இதுவரை மகளிர் உரிமைத்தொகை கிடைக்கப்பெறவில்லை என ஏராளமான மனுக்கள் வரப்பெற்றுள்ளது.

மகளிர் உரிமைத் தொகை கோரி விண்ணப்பித்தவர்களுக்கு கடந்த ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மகளிர் உரிமை தொகை கோரி ஒரே பெயரில் இரண்டு முதல் மூன்று முறை விண்ணப்பிக்கப்பட்டுள்ளது குறித்து உரிய ஆய்வு செய்து சரி செய்யப்படும். தமிழ்நாட்டில் அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் மகளிர் உரிமைத்தொகை திட்டம் செயல்படுத்துவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. கொஞ்சம் பொறுமை காக்க வேண்டும். முதலமைச்சர் கூறியது போல் 2500 ரூபாய் மகளிர் உரிமைத்தொகை விரைவில் வழங்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# திருச்சி-சார்ஜா இடையே கூடுதல் விமான சேவை

திருச்சி, ஜூலை 6

திருச்சி சர்வதேச விமான நிலையத்தில் இருந்து சார்ஜாவுக்கு, ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம், தினசரி ஒரு சேவையை இரு வழித்தடங்களிலும் வழங்கி வருகிறது.

இந்நிலையில் பயணிகளின் தேவையை கருத்தில் கொண்டு திருச்சி சார்ஜா இடையே செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கூடுதலாக ஒரு சேவையை வழங்க உள்ளது.

இந்த தகவலை விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

தினகனி

06.07.2026

# குதிரை பேரத்தை உருவாக்கியவர்களே திமுகவினர்தான் அமைச்சர் செங்கோட்டையன் பேட்டி

சென்னை, ஜூலை 6

தமிழக அரசியல் சூழ்நிலை முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு பரபரப்பாக இருக்கிறது.

த.வெ.க. எம்.எல்.ஏ.வை விலைக்கு வாங்க ரூ.180 கோடியில் சதித்திட்டம் தீட்டப்பட்டதாக முன்னாள் அமைச்சர் செந் தில் பாலாஜி, அவரது தம்பி அசோக்குமாரை போலீசார் தேடி வருகின்றனர்.

எனவே த.வெ.க. ஆட்சியை கலைக்க குதிரை பேரம் நடத்துவதாக தி.மு.க. மீது த.வெ.க. வெளிப்படையாக குற்றம் சாட்டி வருகிறது.

ஆனால் தி.மு.க. எம். எல். ஏ.க்களை விலைக்கு வாங்க த.வெ.க. அரசு முயற்சி செய்து வருவதாக தி.மு.க.வும் குற்றம் சுமத்தி இருக்கிறது. இது ஒருபுறம் இருக்க இது வரை அ.தி.மு.க.வில் இருந்து 6 எம்.எல். ஏ.க்கள் ராஜினாமா செய்து த. வெ.க.வில் இணைந்துள்ளனர். இது அப்பட்டமான குதிரைபேரம் என்று அ.தி. மு.க. குற்றம் சுமத்தி வருகிறது.

இந்த சூழ்நிலையில் தமிழகத்தில் குதிரை பேர அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும், அமைச்சரவை கூட்டத்தில் 2 தனிநபர்கள் கலந்து கொண்டது குறித்து கவர்னர் விசாரிக்க வேண்டும் என்று நேற்று ஒரே நாளில் எதிர்க்கட்சிகளான தி.மு.க., அ.தி.மு.க. மற்றும் பா.ஜனதா சார்பில் கவர்னர் ஆர்.வி.அர்லேகரிடம் மனு அளிக்கப்பட்டது.

இந்தநிலையில், ஈரோட்டில் அமைச்சர் செங்கோட்டையன் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:



என்னை பொறுத்தவரை இந்த குதிரை பேரத்தை உருவாக்கியதே திமுகவினர்தான். ஜெயலலிதா இருந்த காலத்தில், நாங்கள் எதிர்க்கட்சியாக இருக்கிற போது, மதிமுகவை சேர்ந்த ராமகிருஷ்ணனை ராஜினாமா செய்ய வைத்து திமுகவில் இணைத்தனர். பிறகு மீண்டும் திமுகவில் போட்டியிடுவதற்கு வாய்ப்பை அளித்தனர். அனிதா ராதாகிருஷ்ணன் அதிமுகவில் இருந்தவர். அவரையும் அதை தான் செய்தனர். குதிரை பேரத்தை முதல் முதலில் உருவாக்கியதே திமுகவினர்தான். எங்களுக்கு அந்த நிலை இல்லை.

குதிரை பேரம் என்பது எனக்கு புரியவில்லை. எல்லோரும் குதிரை பேரம் என்கிறார்கள். ஆகவே அதற்கு வேறு பொருள் தமிழகத்திற்கு தேடி கொண்டு இருக்கிறோம்.

அதற்கு பதில் சொல்ல வேண்டும் என்பதற்கு தேடிக்கொண்டு இருக்கிறோம். அது கிடைத்தால் அதற்கான பதில் தெரிவிக்கப்படும். நாங்கள் இன்றைக்கு வலிமையாக ஆட்சி அமைத்து இருக்கிறோம், எங்கள் கூட்டணி வலிமையான ஆதரவை தந்து இருக்கிறது. இன்றைக்கு அமைச்சரவையில் காங்கிரஸ், விசிக முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளுக்கும் இடம் வழங்கப்பட்டுள்ளது.

கம்யூனிஸ்ட் கட்சிகள் நாங்கள் வெளியில் இருந்து ஆதரவு தருகிறோம் என்று சொன்னார்கள். குதிரை பேரத்திற்கே வேலை இல்லை. வலிமையான, நேர்மையான ஆட்சி, தமிழ் மக்கள் அனைவரும் விரும்பிய ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 96 பேர் கொண்டு மைனாரிட்டி ஆட்சி நடத்தியவர்களுக்கு தான் குதிரை பேரம் தேவை. எங்களுக்கு தேவை இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

# குளத்தில் மூழ்கடித்து தனியார் நிறுவன ஊழியர் கொலை.. நண்பர் கைது



வாய்மேடு, ஜூலை 6

குளத்தில் மூழ்கடித்து தனியார் நிறுவன ஊழியரை கொலை செய்ததாக அவருடைய நண்பரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

நாகை மாவட்டம் தலைஞாயிறு அருகே உள்ள பண்ணத்தெரு பகுதியை சேர்ந்தவர் சீனிவாசன் மகன் கார்த்தி(வயது 39). இவர், திருப்பூரில் உள்ள ஒருதனியார்நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார். கடந்த சில நாட்களுக்கு முன்பு விடுமுறைக்காக சொந்த ஊருக்கு வந்திருந்த கார்த்தி நேற்று முன்தினம் அந்த பகுதியில் உள்ள வாய்க்காலில் மர்மமான முறையில் பிணமாக கிடந்தார்.

இதுகுறித்து தகவல் அறிந்த தலைஞாயிறு போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஒரத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுதொடர்பாக போலீசார்விசாரணை நடத்தினர்.

போலீசாரின் விசாரணையில் நண்பர்களுக்கு இடையே நடந்த தகராறில் கார்த்தி குளத்தில் மூழ்கடித்து கொலை செய்யப்பட்டார் என்ற திடுக்கிடும் தகவல் கிடைத்தது. இது பற்றி போலீஸ் தரப்பில் கூறியதாவது:

விடுமுறையில் ஊருக்கு வந்திருந்த கார்த்தி நேற்று முன்தினம் தனது நண்பர் கொக்காலடி பகுதியை சேர்ந்த பக்கிரிசாமி மகன் விக்னேஷ்வரன்(31) என்பவருடன் மது அருந்தி உள்ளார். இருவரும் மது குடித்து விட்டு அருகில் உள்ள குளத்தில் இறங்கி குளித்துக்கொண்டிருந்தனர். அப்போது இருவருக்கும் இடையே திடீரென தகராறு ஏற்பட்டது.

இந்த தகராறு முற்றியதில் கார்த்தியை, விக்னேஷ்வரன் குளத்தில் மூழ்கடித்துள்ளார். இதில் கார்த்தி பரிதாபமாக இறந்தார். இதையடுத்துஅவருடையஉடலை விக்னேஷ்வரன் தூக்கிச்சென்று அருகில் உள்ள வாய்க்காலில் போட்டு விட்டு தலைமறைவாகி விட்டார். இவ்வாறு போலீசார் கூறினர்.

இதுதொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்ததுடன் தலைஞாயிறு பகுதியில் தலைமறைவாக இருந்த விக்னேஷ்வரனை கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# "குதிரை பேரம் உண்மையாக இருந்தால்"... திருமாவளவன் பரபரப்பு பேட்டி



சென்னை, ஜூலை 6

த.வெ.க. எம்.எல்.ஏ.வை விலைக்கு வாங்க ரூ.180 கோடியில் சதித்திட்டம் தீட்டப்பட்டதாக முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, அவரது தம்பி அசோக்குமாரை போலீசார் தேடி வருகின்றனர். எனவே த.வெ.க. ஆட்சியை கலைக்க குதிரை பேரம் நடத்துவதாக தி.மு.க. மீது த.வெ.க. வெளிப்படையாக குற்றம் சாட்டி வருகிறது.

இதற்கிடையில் த.வெ.க. அரசுதான் குதிரைபேரம் நடத்துவதாக தி.மு.க., அ.தி.மு.க. மற்றும் பா.ஜனதா ஆகிய எதிர்க்கட்சிகள் கவர்னர் ஆர்.வி.அர்லேகரிடம் நேற்று புகார் மனு அளித்துள்ளன. இதனால் தமிழக அரசியல் சூழ்நிலை முன்பு எப்போதும் இல்லாத அளவுக்கு பரபரப்பாக இருக்கிறது.

இந்த நிலையில், குதிரை பேரம் குறித்து விசிக தலைவர் திருமாவளவன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

அதிமுகவிற்குள் என்ன நடக்கிறது என்பது குறித்து அதிமுக தலைவர்கள் ஏன் வாய் திறக்க மறுக்கிறார்கள்; தவெகவிற்கு எதிராக கொந்தளிக்க வேண்டியவர்கள் அமைதி காப்பதன் பொருள் என்ன?. "அதிமுகவை முழுவதுமாக தவெகவில் இணைப்போம் என்று தவெக தரப்பில் சொல்லப்படுகிறதென்றால் அவர்களிடம் இது சரியா? ஜனநாயகமா? அரசியல் அறமா? என்ற கேள்விகளைக் கேட்க வேண்டும்; ஆனால், எங்களிடம் இதுதொடர்பான கேள்விகளைக் கேட்பது பொருத்தமில்லாதது.

அ.தி.மு.கவை டார்கெட் செய்து இப்படிப்பட்ட நகர்வுகள் நடக்கும் போது, அதுகுறித்து அ.தி.மு.க பொதுச்செயலாளரும், முன்னாள் முதல் அமைச்சருமான எடப்பாடி பழனிசாமி இதுவரை எந்தவொரு கருத்தும் சொல்லாமல் மௌனம் காப்பது ஏன்?.

குதிரை பேரம் உண்மையாக இருந்தால் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்; கவர்னருக்கு அந்த அதிகாரம் இருந்தால் அவர் உடனடியாக தலையிட வேண்டும். தமிழ்நாட்டு அரசியலில் குதிரை பேரம் என்பது மிக மோசமாக, வெளிப்படையாக நடந்து கொண்டிருக்கிறது என்று பேசப்படுகிறது. அப்படியென்றால் அதில் ஈடுபடுபவர்களை நோக்கி நேரடியாகக் கேள்விகளை எழுப்புங்கள்.

குதிரை பேரத்தில் ஈடுபடுவது த.வெ.க. என்றால் த.வெ.க தலைமையிடமும், தி.மு.க ஈடுபடுகிறது என்றால் தி.மு.க. தலைமையிடமும் நேரடியாகக் கேளுங்கள். இதனால் பாதிக்கப்படும் அ.தி.மு.க தலைமையிடம் போய் கேள்வி எழுப்புங்கள். அதை விடுத்து, இதில் எவ்வித சம்பந்தமும் இல்லாத எங்களைப் போன்றவர்களிடம் தொடர்ந்து கேள்வி எழுப்புவது பொருத்தமற்றது.

இவ்வாறு அவர் கூறினார்.

# ரூ.6 கோடி மதிப்புள்ள தங்கம், வெள்ளியுடன் தலைமறைவான 2 பேர் கைது

கோவை, ஜூலை 6

கோவையில் நகை வியாபாரிகளிடமிருந்து பெற்ற ரூ.6 கோடி மதிப்புள்ள தங்கம், வெள்ளியுடன் தலைமறைவான 2 பேரை போலீசார் கைது செய்தனர்.

கோவை பெரியகடை வீதியில் தங்கம், வெள்ளிக் கட்டிகள் விற்பனை மையம் நடத்திய ராஜஸ்தானைச் சேர்ந்த விஜய் அம்பாலால், பிரதீப்குமார் ஆகிய 2 பேர் நகை வியாபாரிகளிடம் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டனர். பின்னர் அந்த நகை வியாபாரிகளிடமிருந்து விற்பனைக்காகப் பெற்ற 6 கோடி ரூபாய் மதிப்புள்ள 4 கிலோ தங்கம் மற்றும் 6 கிலோ வெள்ளிக்கட்டிகளுடன் தலை மறைவாகினர்.

இதுகுறித்த புகாரின்பேரில் போலீசார் தனிப்படை அமைத்து, அந்த 2 பேரின் செல்போன் எண்களைக் கொண்டு தீவிரமாக விசாரித்தனர். கோவையிலுள்ள ஒரு வீட்டில் பதுங்கியிருந்த அவர்கள் 2 பேரையும் போலீசார் சுற்றி வளைத்து கைது செய்தனர். அவர்கள் யாரிடம் நகைகளை கொடுத்தனர் என்பது குறித்து போலீசார் தொடர்ந்து விசாரித்து வருகின்றனர்.

# 'மீனாட்சி அம்மன் கோவிலில் திட்டமிட்டபடி கும்பாபிஷேகம் நடைபெறும்' அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல்குமார்

மதுரை, ஜூலை 6

அறுபடைவீடுகளில் 6வது படை வீடான பழமுதிர்சோலை முருகன் கோவில், இன்று கும்பாபிஷேக விழா சிறப்பாக நடைபெற்றது. இந்த விழாவில் அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல்குமார் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார். இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய போது அவர் கூறியதாவது;

"பழமுதிர்சோலையில் கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்து முடிந்துள்ளது. இதில் த.வெ.க. சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தோம். பக்தர்களுக்கு தேவையான அனைத்து வசதிகளும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. அடிப்படை வசதிகள், பார்க்கிங் வசதிகள் உள்ளிட்ட அனைத்தும் சரியாக செய்யப்பட்டுள்ளது. கும்பாபிஷேகத்திற்கு ஆயிரக்கணக்கான மக்கள் வருகை தந்து நல்ல முறையில் சாமி தரிசனம் செய்தனர். அடுத்தடுத்து பல கோவில்களில் கும்பாபிஷேகம் விழாக்கள் நடைபெற உள்ளன. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலிலும் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளது. அதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன. மீனாட்சி அம்மன் கோவிலில் எந்த தாமதமும் இன்றி திட்டமிட்டபடி கும்பாபிஷேகம் நடைபெறும்." இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# கள்ளக்குறிச்சியில் இரவு நேரத்தில் சிறுத்தை நடமாடுவதாக அச்சம் சி.சி.டி.வி.யில் பதிவான உருவத்தால் பரபரப்பு

கள்ளக்குறிச்சி, ஜூலை 6

கள்ளக்குறிச்சி மாவட்டம் பு.மாம்பாக்கம் கிராமத்தில் உள்ள கரும்புத் தோட்டம் அருகே வசிக்கும் விவசாயி எழில் ராஜா என்பவரது வீட்டில் பொறுத்தப்பட்டுள்ள சி.சி.டி.வி. கேமராவில் இரவு நேரத்தில் பதிவான காட்சியால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இரவு நேரத்தில் மர்ம விலங்கு ஒன்று அந்த பகுதியில் நடமாடுவது சி.சி.டி.வி. கேரமாவில் பதிவாகியுள்ளது. அந்த விலங்கு அங்குள்ள கோழிக்கூண்டை மோப்பம் பிடித்தபடி சுற்றித் திரிந்துள்ளது. இந்நிலையில், வந்தது காட்டுப்பூனையா? அல்லது சிறுத்தையா? என்பது உறுதியாக தெரியாத்தால் அப்பகுதி மக்கள் அச்சத்தில் உள்ளனர். வனத்துறையினர் சி.சி.டி.வி. காட்சிகளை ஆய்வு செய்து, விலங்கை அடையாளம் கண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மக்களாட்சி தத்துவத்தை புதைக்கும் முயற்சியில் கவர்னர் வேல்முருகன் கண்டனம்

சென்னை, ஜூலை 6

தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;மக்களாட்சி தத்துவத்தை புதைக்கும் முயற்சியில் கவர்னர்



மத்திய அரசு மாநிலத்திலும் கூட்டாட்சியை நிலைநாட்டும் முயற்சியின் ஒரு பகுதியாகத்தான் கவர்னர் மதுரையில் நடத்திய ஆய்வு கூட்டமும், நேற்றைய கவர்னரின் உரையும் அமைந்துள்ளது.

அண்மையில் மதுரையில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற தமிழ்நாடு பொறுப்பு கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் பேசும்போது, மதுரை வைகை ஆற்றை பார்த்தேன். ஆறு உள்ளது, நீர் எங்கே? இதற்கு நாம்தான் பொறுப்பேற்க வேண்டும்.

துப்பாக்கி எடுத்து போருக்கு செல்வது மட்டுமல்ல, நதிகளை மீட்பதும் தேசப்பற்றுதான். மதுரை இளைஞர்கள் இதை ஒரு இலக்காக மாற்றி வைகையை மீட்டெடுக்க முன்வர வேண்டும். வைகை ஆற்றை யாரும் சீரமைக்காவிட்டால், கவர்னர் மாளிகையே களமிறங்கும் என கூறியுள்ளார்.இதை தொடர்ந்து மதுரை மாவட்ட ஆட்சியர் நிசாந்த் கிருஷ்ணா உள்ளிட்ட அரசு அலுவலர்களுடன் ஆய்வு கூட்டம் நடத்தினார். அதில் வைகை ஆற்றைப் பற்றியும் விசாரித்தறிந்தார்.

இதன் தொடர்ச்சியாக நேற்று கவர்னர் மாளிகையில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் உரையாற்றியபோது, "மக்கள் பிரச்சினைகளுக்காக போராடுபவர்கள் கவர்னர் மாளிகையை அணுகலாம். என்னிடம் அளிக்கும் கோரிக்கைகளை தமிழக அரசிடம் கொண்டு சென்று தீர்வு காண அறிவுறுத்துவேன்.

ஒன்றிணைந்து மக்களுக்காக செயல்படுவோம். வாக்களித்த மக்களால் பிரச்சினைகளை உணர முடியும். தீர்வு சொல்லவும் முடியும். என்னிடம் தீர்வுகளை சொன்னால் நான் புதிதாக தேர்வு செய்யப்பட்ட முதல்வரிடம் சொல்வேன்" என்று கூறியுள்ளார்.

கவர்னர் என்பதை மறந்தும், தன் அதிகாரம் எதுவரை என்பதை உணராமலும், மக்களால் தேர்வு செய்யப்பட்டவர் போல ஆய்வு கூட்டம் நடத்துவதும், 'என்னிடம் கோரிக்கைகளை சொல்லுங்கள், நான் தமிழக அரசிடம் கொண்டு சென்று தீர்வு காண அறிவுறுத்துவேன்' என்பதும் ஏற்றுக்கொள்ள முடியாதது. கவர்னரின் செயல்பாடுகளுக்கு கடும் கண்டனம் தெரிவித்து கொள்கிறேன்.

மாநில உரிமைகளை விட்டு கொடுக்காமல் சுயசார்புடன் தமிழ்நாடு அரசு ஆட்சி புரிய வேண்டும். கடந்த காலங்களில் மாநில உரிமைகள் பாதுகாக்கப்பட்டன. மத்திய அரசுடன் இணக்கமாக செல்வது வேறு, இணங்கி செல்வது வேறு. கவர்னரின் அத்துமீறல்களை தமிழ்நாடு அரசு கண்டுகொள்ளாமல் இருப்பது இணங்கி செல்வதை போன்று தோற்றமளிக்கிறது.

மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற கடந்த கால வரலாறுகளை தமிழக முதல்அமைச்சர் கவனத்தில் கொள்ள வேண்டும். மத்திய அரசு மாநிலத்திலும் கூட்டாட்சியை நிலைநாட்டும் முயற்சியின் ஒரு பகுதியே கவர்னரின் இந்த செயல்பாடுகள்" என குற்றம் சாட்டுகிறேன்.இவ்வாறுஅதில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வாடிக்கையாளர் போல் நடித்து 85 சவரன் நகை திருடிய பெண் கைது

சென்னை, ஜூலை 6

சென்னையில் வாடிக்கையாளர் போல் நடித்து நகைக்கடையில் 85 சவரன் நகைகளை திருடிய பெண்ணை போலீசார்கைதுசெய்தனர்.

சென்னை வியாசர்பாடி 14வது மேற்கு குறுக்கு தெருவைச் சேர்ந்த அன்குஷ் (வயது 33), தனது வீட்டின் தரைதளத்தில் நகைக் கடை நடத்தி வருகிறார். கடந்த 4 மாதங்களாக இவரது கடைக்கு வாடிக்கையாளர் போல் முகம் தெரியாதபடி ஹிஜாப் அணிந்து வந்த சுமார் 50 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர், நகை வாங்குவது போல் கடையில் உள்ள ஒவ்வொரு நகையையும் எடுத்துபார்ப்பார். ஆனால் அந்த மாடல் தனக்கு பிடிக்கவில்லை என்று கூறி விட்டு எதுவும் வாங்காமல் சென்றுவிடுவார்.

85 சவரன் நகை திருட்டு

இந்த நிலையில் சமீபத்தில் கடையில் இருந்த நகைகளைஅன்குஷ் கணக்கிட்டபோது சுமார் 85 சவரன் நகைகள் குறைவாக இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். பின்னர் கடையில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஆய்வு செய்தார். அதில் தனது கடைக்கு வாடிக்கையாளர் போல கடந்த 4 மாதங்களாக வந்து சென்ற பெண் தான், அந்த நகைகளை திருடிச்சென்று இருப்பது தெரிந்தது. அவர் திருடிய நகைகளை தனது ஆடையில் மறைத்து காரில் தப்பிச்செல்லும் காட்சியும் கண்காணிப்பு கேமராவில் பதிவாகி இருந்தது.

பெண் கைது

இதுகுறித்து அன்குஷ் அளித்த புகாரின்பேரில் எம்.கே.பி.நகர் குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். கண்காணிப்பு கேமராவில் பதிவான காரின் பதிவு எண்ணை வைத்து நடத்திய விசாரணையில் இந்த நூதன திருட்டில் ஈடுபட்டவர் மீஞ்சூரைச் சேர்ந்த ரிகானா(50) என்பது தெரியவந்தது. அவரை போலீசார் கைது செய்தனர். அவரிடம் இருந்து 20 சவரன் நகைகள் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும், அவருக்கு உடந்தையாக இருந்தவர்கள் குறித்தும், அவர் இது போல் வேறு எங்காவது நகை திருட்டில் ஈடுபட்டாரா? எனவும் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# கூட்டுறவு கடன் சங்கத்தில் கொள்ளை முயற்சி: எட்டயபுரம் அருகே பரபரப்பு

தூத்துக்குடி, ஜூலை 6

தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் அருகே உள்ள வெள்ளையம்மாள்புரம் கிராம கூட்டுறவு கடன் சங்கத்தில் மர்ம நபர்கள் பூட்டை உடைத்து லாக்கரைத் திறக்க முயன்ற துணிகரக் கொள்ளை முயற்சி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வெள்ளையம்மாள்புரம் கிராம கூட்டுறவு கடன் சங்கத்தில் நேற்று மாலை வழக்கமான பணிகள் முடிந்ததும், எழுத்தர் மாரீஸ்வரி கட்டிடத்தை பூட்டிவிட்டு சென்றார். இன்று காலை கூட்டுறவு சங்கச் செயலாளர் செல்வகுமார் (56) அலுவலகத்தைத் திறக்க வந்த போது, முன்பக்கக் கதவின் பூட்டு உடைக்கப்பட்டிருந்ததைகண்டு அதிர்ச்சியடைந்தார்.




உடனடியாக உள்ளே சென்று பார்வையிட்ட போது, அடையாளம் தெரியாத மர்ம நபர்கள் கட்டிடத்திற்குள் புகுந்து, அங்கிருந்த முக்கிய லாக்கரை உடைத்து கொள்ளையடிக்க முயன்றது தெரிய வந்தது. ஆனால், லாக்கரை உடைக்க முடியாததால் அதிலிருந்த சுமார் 100 பவுன்நகைகள், பணம் மற்றும் முக்கிய பத்திரங்கள் தப்பியதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

தகவலறிந்த எப்போதும் வென்றான்காவல்நிலைய ஆய்வாளர் உமா மகேஸ்வரி தலைமையிலான போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டனர். கைரேகை நிபுணர்களும் சம்பவ இடத்தில் ஆய்வு செய்து தடயங்களைச் சேகரித்தனர்.

இந்த துணிகரக் கொள்ளைமுயற்சிதொடர்பாக எப்போதும்வென்றான் போலீசார் வழக்குப் பதிவு செய்து, சம்பவத்தில் ஈடுபட்ட மர்ம நபர்களை தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

# சிலர் சோபா வந்தவுடன் நம்மை விட்டுச் சென்றுள்ளனர் உதயநிதி பேச்சு

சென்னை, ஜூலை 6

சோபா வந்தவுடன் சில பேர் திமுகவை விட்டுச் சென்று விட்டனர் என சென்னையில் நடந்த திருமண விழாவில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசி உள்ளார்.

சென்னை திருவேற்காட்டில் திமுக தலைமை நிலையச் செயலர் துறைமுகம் காஜா இல்ல திருமண விழா நடைபெற்றது. விழாவில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தி பேசினார். அவர் பேசியதாவது:

இந்த திருமண விழாவில் இஸ்லாமிய பெருமக்கள் பெருமளவில் கலந்துகொண்டிருக்கிறீர்கள். இன்று நாட்டில் என்ன நடக்கிறது என்பதை நீங்கள் அனைவரும் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள். இன்று சிலர் சோபா வந்தவுடன் நம்மை விட்டு சென்றுள்ளனர். ஆனால் நீங்கள் அனைவரும் திமுகவுடன் இருப்போம் என்று உறுதியோடு வந்திருக்கிறீர்கள்.



ஏனென்றால் இஸ்லாமியர்களுக்கும் தி.மு.க.விற்குமான உறவை யார் நினைத்தாலும் பிரிக்க முடியாது. யார் என்ன சொன்னாலும், எந்த அவதூறுகளை பரப்பினாலும், சிறுபான்மை மக்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் தி.மு.க. என்றும் காவல் அரணாக இருக்கும்.

தமிழ்நாட்டில் என்ன நடந்தாலும் கண்டுகொள்ளாத அரசாக உள்ளது தவெக அரசு. தற்போது தமிழ்நாட்டில் நடந்துகொண்டிருப்பது அரசியல் பேரிடர். இந்த பேரிடரில் இருந்து தமிழ்நாட்டை திமுக மீட்கும்.

இவ்வாறு அவர் கூறினார்.

தின கனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

06.07.2026

# கள்ளக்குறிச்சியில் இரவு நேரத்தில் சிறுத்தை நடமாடுவதாக அச்சம் சி.சி.டி.வி.யில் பதிவான உருவத்தால் பரபரப்பு



கள்ளக்குறிச்சி, ஜூலை 6

கள்ளக்குறிச்சி மாவட்டம் பு.மாம்பாக்கம் கிராமத்தில் உள்ள கரும்புத் தோட்டம் அருகே வசிக்கும் விவசாயி எழில் ராஜா என்பவரது வீட்டில் பொறுத்தப்பட்டுள்ள சி.சி.டி.வி. கேமராவில் இரவு நேரத்தில் பதிவான காட்சியால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இரவு நேரத்தில் மர்ம விலங்கு ஒன்று அந்த பகுதியில் நடமாடுவது சி.சி.டி.வி. கேரமாவில் பதிவாகியுள்ளது. அந்த விலங்கு அங்குள்ள கோழிக்கூண்டை மோப்பம் பிடித்தபடி சுற்றித் திரிந்துள்ளது. இந்நிலையில், வந்தது காட்டுப்பூனையா? அல்லது சிறுத்தையா? என்பது உறுதியாக தெரியாத்தால் அப்பகுதி மக்கள் அச்சத்தில் உள்ளனர். வனத்துறையினர் சி.சி.டி.வி. காட்சிகளை ஆய்வு செய்து, விலங்கை அடையாளம் கண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# டிக்கெட் எங்கே என கேட்ட டிடிஆர்...கன்னத்தில் பளார் விட்ட சட்ட கல்லூரி மாணவி



சென்னை, ஜூலை 6

சென்னை எழும்பூர் ரெயில் நிலையத்தில் சட்ட கல்லூரி மாணவி, டிக்கெட் பரிசோதகர் இடையே டிக்கெட் கேட்பதில் தொடங்கிய வாக்குவாதம் கைகலப்பாக மாறியது.

சென்னை கடற்கரை ரெயில் நிலையத்திலிருந்து எழும்பூர் ரெயில் நிலையத்திற்கு நேற்று சட்டக் கல்லூரி மாணவி ஒருவர் வந்துள்ளார்.

அங்கு பணியில் இருந்த பெண் டிக்கெட் பரிசோதர்கள்( டிடிஆர்) சட்ட கல்லூரி மாணவியிடம் டிக்கெட் எங்கே காட்டு என கேட்டுள்ளனர். அதற்கு அந்த மாணவி, "நான் ரெயிலில் பயணம் செய்யவில்லை, உறவினரை வழியனுப்ப வந்தேன்" என்று கூறியுள்ளார். சரி பிளாட் பார்ம் டிக்கெட் எங்கே என்று கேட்டனர்.

அந்த டிக்கெட்டையும் அந்த மாணவி எடுக்கவில்லை என தெரிகிறது. இதனால் அவரை தங்களது அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று விசாரித்துள்ளனர். விசாரணையின் போது சட்ட கல்லூரி மாணவியின் மொபைல் போனை டிக்கெட் பரிசோதகர் வாங்கி வைத்துள்ளார். இதனால் கோபமடைந்த மாணவி, "தன்னுடைய செல்போனை கொடுங்கள்" என்று கேட்டு வாக்குவாதம் செய்ததாக கூறப்படுகிறது.

ஒரு கட்டத்தில் அவர் செல்போனை கொடுக்காததால் திடீரென மாணவி, பெண் டிக்கெட் பரிசோதகரின் கன்னத்தில் பளார் என்று அறைந்துள்ளார். இதனால் இருதரப்புக்கும் இடையே கடுமையான கைகலப்பு மற்றும் சண்டை உருவானது. அந்த டிக்கெட் பரிசோதகருடன் இன்னொரு டிடிஆரும் உடன் இருந்தார்.

இந்த சம்பவம் தொடர்பாக எழும்பூர் ரெயில்வே போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். அண்மைக்காலமாக பயணிக்கும் டிடிஆருக்கும் இடையே அவ்வப்போது மோதல் சம்பவங்கள் நடைபெறுவது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# திருவண்ணாமலையில் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை: எஸ்.பி. தலைமையில் 100க்கும் மேற்பட்ட போலீசார் அதிரடி சோதனை

திருவண்ணாமலை, ஜூலை 6

திருவண்ணாமலையில் போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக, மாவட்ட எஸ்.பி. உதயகுமார்தலைமையில் 100க்கும் மேற்பட்ட போலீசார் நாவக்கரை பகுதியில் அதிரடி சோதனை நடத்தினர். மோப்பநாய்கள் உதவியுடன் நடைபெற்ற இந்த சோதனையில், கஞ்சா மற்றும் போதைப்பொருட்கள் விற்பனை தொடர்பாக இருவரை போலீசார் விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளனர்.

முதற்கட்ட விசாரணையில், திருப்பூர், கோயம்புத்தூர் மற்றும் புதுச்சேரி உள்ளிட்ட பகுதிகளுக்கு போதைப்பொருட்கள் விநியோகம் செய்ததாக போலீசாருக்கு தகவல் கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது. இந்த சம்பவம் தொடர்பாக காவல்துறையினர் தொடர்ந்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருவண்ணாமலையில் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கை: எஸ்.பி. தலைமையில் 100க்கும் மேற்பட்ட போலீசார் அதிரடி சோதனை

சென்னை, ஜூலை 6

சென்னையில் 41 மின்சார ரெயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதால் பயணிகள் அவதி அடைந்துள்ளனர்.

சென்னை கடற்கரை தாம்பரம் தடத்தில் தினமும் 200க்கும் மேற்பட்ட மின்சார ரெயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இதில் தினமும் சுமார் 3 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயணம் செய்து வருகின்றனர். அலுவலக பணிக்கு செல்வோர், பள்ளி, கல்லூரிக்கு செல்வோர் என அனைத்து தரப்பு மக்களும் புறநகர் மின்சார ரெயில் போக்குவரத்தை பயன்படுத்தி வருகின்றனர்.

ரெயில் சேவைகள் ரத்து செய்யப்படுவது முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், தங்களின் அவசரப் பயணங்களை 10:30 மணிக்கு முன்பாகவே முடித்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் ஆயிரக்கணக்கான பயணிகள் காலை 10 மணிக்கு முன்பாகவே தாம்பரம் ரெயில் நிலையத்தில் திரண்டனர்.

ஒரே நேரத்தில் வழக்கத்திற்கு மாறாகப் பெருந்திரளான மக்கள் கூடியதால், டிக்கெட் கவுண்ட்டர்கள் மற்றும் நடைமேடைகளில் பயணிகள் கூட்டம் அலைமோதியது.

ரெயில்கள் ரத்தால் பயணிகள் கடும் அவதி அடைந்துள்ளனர். பயணிகளின் சிரமத்தைக் குறைக்க தாம்பரம்செங்கல்பட்டு, அரக்கோணம் மற்றும் திருமால்பூர் ஆகிய பகுதிகளுக்கு இடையே குறிப்பிட்ட கால இடைவெளியில் தெற்கு ரெயில்வே சிறப்பு ரெயில்களை இயக்கி வருகிறது. மதியம் 3:30 மணிக்கு மேல் பராமரிப்புப் பணிகள் நிறைவடைந்தவுடன், புறநகர் மின்சார ரெயில் சேவைகள் மீண்டும் வழக்கம்போல் தடையின்றி இயங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (06.07.2026)

**மேஷம்**: இன்று சந்திரனின் நற்பலன்களால் உங்களின் தன்னம்பிக்கை அதிகரிக்கும். குடும்பத்தில் நீண்ட நாட்களாக இருந்த பிரச்சினைகள் முடிவுக்கு வரும். வேலை செய்யும் இடத்தில் உங்களின் திறமைக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கும். புதிய முதலீடுகளில் நிதானம் தேவை.

**ரிஷபம்**: தொழில் மற்றும் வியாபாரத்தில் நல்ல லாபத்தைக் காண்பீர்கள். நண்பர்கள் மற்றும் நலம் விரும்பிகளிடமிருந்து எதிர்பார்த்த உதவி சரியான நேரத்தில் கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் அனுகூலமான போக்கு நிலவும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**மிதுனம்**: தொழில் நிமித்தமாக புதிய பொறுப்புகள் உங்களைத் தேடி வரும். கூட்டு வியாபாரத்தில் பார்ட்னர்களின் முழு ஒத்துழைப்பு கிடைக்கும். குடும்பத்தில் சுப காரிய பேச்சுவார்த்தைகள் கைகூடும். உடல் ஆரோக்கியத்தில் மட்டும் சிறு கவனம் செலுத்துங்கள்.

**கடகம்**: இன்று உங்களுக்குப் பொருளாதார ரீதியாகப் பொன்னான நாள். தடைப்பட்டிருந்த சம்பள பாக்கிகள் அல்லது வரவேண்டிய பழைய கடன்கள் கைக்கு வந்து சேரும். கலைத்துறையில் இருப்பவர்களுக்குப் புதிய நல்ல வாய்ப்புகள் அமையக்கூடும்.

**சிம்மம்**: இன்று உங்களுக்குச் சந்திராஷ்டமம் உள்ளதால் மிகுந்த கவனம் தேவை. மற்றவர்களுடன் பேசும்போது வார்த்தைகளில் நிதானத்தைக் கடைப்பிடிக்கவும். புதிய பெரிய முதலீடுகள், முக்கியப் பத்திரங்களில் கையெழுத்திடுவது மற்றும் நீண்ட தூரப் பயணங்களைத் தள்ளி வைப்பது நல்லது.

**கன்னி**: தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய திட்டங்களைச் செயல்படுத்த முற்படுவீர்கள். கடிதங்கள் அல்லது மின்னஞ்சல் மூலம் நல்ல செய்திகள் வந்து சேரும். கணவன் மனைவியிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள்.

**துலாம்**: வெளிவட்டாரப் பழக்கவழக்கங்களால் உங்களுக்குப் புதிய லாபங்கள் உண்டாகும். உத்தியோகஸ்தர்களுக்குப் பணியில் திறமைக்கேற்ற உயர்வுகளும் பாராட்டுகளும் கிடைக்கும். உற்றார்உறவினர்களின்வருகையால் வீட்டில் மகிழ்ச்சி நிலவும்.

**விருச்சிகம்**: தொலைதூரப் பயணங்களால் சிறு அலைச்சல்கள் இருந்தாலும், அதன் மூலம் நல்ல அனுகூலமான பலன்களையே அடைவீர்கள். குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் நீங்கி மனநிம்மதி உண்டாகும். பொருளாதார நிலை சீராக இருக்கும்.

**தனுசு**: மனைவி வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிட்டும். தாய்வழி உறவினர்களால் ஆதாயம் அடைய வாய்ப்புண்டு. உத்தியோகத்தில் உங்களின் மதிப்பு கூடும் என்றாலும், வேலைப்பளு சற்று அதிகமாகவே இருக்கும். வரவுக்கு ஏற்ற செலவுகளும் வந்து போகும்.

**மகரம்**: அதிர்ஷ்டம் நிறைந்த நாளாக அமையப் போகிறது. புதிய காரியங்களில் தைரியமாக இறங்கி வெற்றி காண்பீர்கள். உங்களின் நீண்ட நாள் கனவு ஒன்று நனவாக வாய்ப்புள்ளது. நவீனப் பொருட்கள் வாங்கும் யோகம் உண்டாகும்.

**கும்பம்**: சுபநிகழ்ச்சிகள் மற்றும் திருமணப் பேச்சுவார்த்தைகள்வெற்றிகரமாகமுடிவடையும். பெரிய மனிதர்களின் ஆதரவும், வழிகாட்டுதலும் உங்களுக்குக் கிடைக்கும். உத்தியோகம் மற்றும் வியாபார ரீதியாக நல்ல முன்னேற்றத்தைக் காணலாம்.

**மீனம்**: இன்று சந்திரன் உங்கள் ராசியில் சஞ்சரிப்பதால் ஆன்மீகக் காரியங்களில் ஈடுபாடு அதிகரிக்கும். உங்களைப் பிடிக்காத எதிரிகள் கூட உங்களின் நேர்மையைக் கண்டு விலகிச் செல்வர். நீண்ட நாட்களாகத்தரவேண்டிய கடன்களை அடைத்துச் சேமிப்பைத் தொடங்குவீர்கள்.

# ஆட்கள் பற்றாக்குறையால் நெல் நடவு பணியில் ஈடுபடும் வடமாநில தொழிலாளர்கள்

தஞ்சாவூர், ஜூலை 6

அய்யம்பேட்டை பகுதியில் ஆட்கள் பற்றாக்குறையால் நெல் நடவு பணியில் வடமாநில தொழிலாளர்கள் ஈடுபட்டு வருகின் றனர்.

தஞ்சாவூர்மாவட்டம்அய்யம்பேட்டை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் குறுவை நெல் நடவு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இப்பகுதி யில் கடந்த சில ஆண்டுகளாகவே விவசாய கூலி தொழிலாளர்கள் போதிய அளவில் கிடைப்பதில்லை. மேலும் 125 நாள் வேலை திட்ட பணி தற்போது தொடங்கி இருப்பதால் அந்த பணிகளுக்கு தொழிலாளர்கள் சென்று விடுகின்றனர்.

நெல் நாற்றுகள் வளர்ந்து விட்ட நிலையில் ஆட்கள் பற்றாக்கு றையால் இப்பகுதியில் நடவு பணியில் தொய்வு ஏற்பட்டிருந்தது. தற்போது அய்யம்பேட்டை பகுதியில் வடமாநில தொழிலாளர்கள் நடவு பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இதுகுறித்து இப்பகுதி விவசாயிகள் கூறும்போது, உள்ளூர் தொழிலாளர்கள் பற்றாக்குறை காரணமாக எப்படி நடவு பணிசெய்வதுஎன்றுநினைத்திருந்தோம். நடவு பணியில் வடமாநில தொழிலாளர்களும் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் வடமாநில தொழிலாளர்களை வைத்து நடவு பணியில் ஈடுபட்டு வருகிறோம். ஒரு ஏக்கருக்கு நாற்று பறிக்க, நடவு செய்ய ரூ.7 ஆயிரம் வரை செலவழித்து வந்த நிலையில் தற்போது வடமாநில தொழிலாளர்கள் ரூ.5 ஆயிரம் சம்பளத்திற்கு நாற்று பறித்தும், நடவு பணியிலும் ஈடுபடுகின்றனர். இதன் காரணமாக செலவு குறைவதுடன், உரிய நேரத்தில் நடவு பணிகளும் நடக்கிறது என்றனர்.

# "கூச்ச சுபாவமுள்ள சிறுமி... இன்று நட்சத்திரம்" பள்ளி நினைவுகளை பகிர்ந்த பூஜா ஹெக்டே



கூச்ச சுபாவமுள்ள பள்ளி மாணவியிலிருந்து நட்சத்திரமாக உயர்ந்த தனது பயணம் குறித்து பூஜா ஹெக்டே நினைவுகூர்ந்தார்.

பாலிவுட், தென்னிந்திய சினிமா என கலக்கி வரும் நடிகை பூஜா ஹெக்டே. தமிழில் 'முகமூடி', 'பீஸ்ட்' ஆகிய படங்களில் நடித்தார். விஜய்க்கு ஜோடியாக அவர் நடித்த 'ஜனநாயகன்' திரைப்படம் விரைவில் ரிலீசுக்கு வர இருக்கிறது.

இதற்கிடையில், இவருக்கு பான்இந்தியா ஸ்டைல் ஐகான் ஆப் தி இயர் விருந்து வழங்கப்பட்டது.

இந்நிலையில், தனது பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பூஜா ஹெக்டே, ஆசிரியர்களை மீண்டும் சந்தித்த புகைப்படங்களை பகிர்ந்து நெகிழ்ச்சி தெரிவித்தார். அவர் பகிர்ந்த பதிவில்,

"இந்த வாரம் என் வாழ்க்கையில் மிகவும் சிறப்பான வாரமாக அமைந்தது. 'பான்இந்தியா ஸ்டைல் ஐகான் ஆப் தி இயர்' விருதை பெற்றேன். அதேபோல், நான் படித்த பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பங்கேற்று, என் ஆசிரியர்களை மீண்டும் சந்தித்தேன்.

பள்ளியில் மிகவும் அமைதியாக , புத்தகங்களில் ஆர்வம் கொண்ட, மிகவும் கூச்ச சுபாவமுள்ள அந்த சிறுமி, இன்று தனது பணிக்காக அங்கீகாரம் பெறுவதை நினைத்து நெகிழ்ச்சி அடைகிறாள். தொடர்ந்து என் கனவுகளை நோக்கி கடினமாக உழைப்பேன்' என்று தெரிவித்துள்ளார்.

# 'தொழில்நுட்பம் மாறிக்கொண்டே இருக்கும்... இன்றைக்கு ரீல்ஸ் காலம், அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்' நடிகர் விஷ்ணு விஷால்



கடந்த 2022ம் ஆண்டு நடிகர் விஷ்ணு விஷால், நடிகை ஐஸ்வர்யா லட்சுமி நடிப்பில் வெளியான 'கட்டா குஸ்தி' திரைப்படம் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது. அதனை தொடர்ந்து, இயக்குநர் செல்லா அய்யாவு இயக்கத்தில்'கட்டாகுஸ்தி2'படம்கடந்த3ந்தேதிவெளியாகிதிரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது.

இந்நிலையில் மதுரைக்கு வருகை தந்த 'கட்டா குஸ்தி 2' படக்குழுவினர், அங்கு ரசிகர்கள் மற்றும் செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது நடிகர் விஷ்ணு விஷாலிடம் செய்தியாளர் ஒருவர், "இன்றைய காலகட்டத்தில் ரீல்ஸ் மோகம் படிப்படியாக அதிகரித்து ஆட்சியை பிடிக்கும் அளவிற்கு வளர்ந்துள்ளது. இது நல்லது என்று நினைக்கிறீர்களா?" என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த விஷ்ணு விஷால், "காலத்திற்கு ஏற்றவாறு தொழில்நுட்பம் மாறிக்கொண்டேதான் இருக்கும். மாற்றம் என்பது நிலையானது. அதற்கு ஏற்றவாறு நாமும் மாறிக் கொள்ள வேண்டும். நான் சினிமாவிற்குள் வந்த சமயத்தில் ரீல்(திரைப்படச் சுருள்) மூலமாக திரைப்படங்களை எடுத்தார்கள். அதன் பிறகு டிஜிட்டல் கேமராக்கள் வந்துவிட்டன.

திரைத்துறை டிஜிட்டல்மயமாக ஆரம்பித்த சமயத்தில் குறும்படங்கள் கவனம் பெற்றன. குறும்பட இயக்குநர்களுக்கு முக்கியத்துவம் அதிகரித்தது. அந்த மாற்றத்தை ஏற்றுக் கொண்டு நான் செய்த திரைப்படங்கள்தான் 'முண்டாசுப்பட்டி', 'இன்று நேற்று நாளை' போன்றவையாகும். நான் மாற்றத்தை ஏற்றுக் கொள்ளாமல், குறும்பட இயக்குநர்களுடன் பணியாற்றாமல் இருந்திருந்தால் அடுத்தகட்டத்திற்கு சென்றிருக்க மாட்டேன்.

எனவே தொழில்நுட்பம் மாறும், காலம் மாறும், மக்களின் ரசனை மாறும். அதற்கு ஏற்றவாறு நாமும் மாற வேண்டும். அதன்படி இன்றைக்கு ரீல்ஸ் காலம். அதை நாம் ஏற்றுக்கொண்டு, அதற்கு ஏற்றவாறு வாழ வேண்டும். ஆனால் ரீல்ஸ் மட்டுமே வாழ்க்கை கிடையாது. ரீல்ஸை தாண்டியும் வாழ்க்கை இருக்கிறது. ரீல்ஸ் மட்டுமே பார்த்து உண்மையான வாழ்க்கையை விட்டுவிடக் கூடாது" என்று தெரிவித்தார்.

தொடர்ந்து 'ஜனநாயகன்' திரைப்படம் குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு, "மிகுந்த ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கிறோம். விஜய் முதல்அமைச்சராக பதவியேற்ற பிறகு அவரது 'ஜனநாயகன்' திரைப்படம் வர இருக்கிறது. சில காரணங்களால் இத்தனை காலம் தாமதமாகிவிட்டது. ஆனால் படம் வரும்போது நிச்சயமாக சினிமாவுக்கு அது ஒரு கொண்டாட்டமாக இருக்கும். நானும் முதல் நாள் முதல் காட்சியை கண்டிப்பாக சென்று பார்ப்பேன்" என்று விஷ்ணு விஷால் தெரிவித்தார்.

# காயத்தில் இருந்து மீண்ட நெய்மார்... நார்வேவுக்கு காத்திருக்கும் சவால் ரவுண்ட் ஆப் 16ல் நடக்கப்போகும் அதிரடி



பிரேசில் அணியின் நட்சத்திர வீரர் நெய்மார் முழு உடற்தகுதியுடன் இருப்பதாக அந்த அணியின் தலைமை பயிற்சியாளர் கார்லோ அன்செலோட்டி தெரிவித்துள்ளார்.

பிரேசில் பயிற்சியாளர் அன்செலோட்டி அளித்த பேட்டியில் கூறியுள்ளதாவது:


''நெய்மார் விளையாட தயாராக இருக்கிறார். அணிக்கு எப்போது தேவையோ, அப்போது அவரை நான் களம் இறக்குவேன். அவர் கண்டிப்பாக முழுமையாக 90 நிமிடங்களும் விளையாடக்கூடிய தகுதியுடன் தான் இருக்கிறார்" என்றார்.

மேலும், அவர் பெஞ்சில் அமர்ந்திருக்க விரும்பவில்லை என்பதும், விளையாட மிகவும் ஆர்வமாக இருக்கிறார் என்பதும் அவரது பயிற்சியின் மூலம் தெளிவாக தெரிகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

காயம் காரணமாக இந்த உலகக் கோப்பை தொடரின் குரூப் சுற்று ஆட்டங்களில் நெய்மர் மாற்று வீரராக மிகக் குறைந்த நேரம் மட்டுமே களம் இறங்கினார். தற்போது நெய்மார் முழுமையாகக் குணமடைந்துள்ளதால், நாக்அவுட் சுற்றில் பிரேசில் அணிக்கு அவர் மிகப்பெரிய பலமாக அமைவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாளை நடக்கவிருக்கும் விறுவிறுப்பான ரவுண்ட் ஆப் 16 போட்டியில், பலம் வாய்ந்த நார்வே அணியை பிரேசில் எதிர்கொள்கிறது. இதில் வெற்றி பெறும் அணி கால் இறுதிக்கு தகுதி பெறும்.

# விம்பிள்டன் டென்னிஸ்: இகா ஸ்வியாடெக் தோல்வி



'கிராண்ட்ஸ்லாம்' அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் டென்னிஸ் போட்டி லண்டனில் நடந்து வருகிறது. இதில் பெண்கள் ஒற்றையர் 3வது சுற்றில் நடப்பு சாம்பியன் இகா ஸ்வியாடெக் (போலந்து) 67 (911), 26 என்ற நேர்செட்டில் 21 வயது அலெக்சாண்ட்ரா ஈலாவிடம் (பிலிப்பைன்ஸ்) அதிர்ச்சிகரமாக தோற்று நடையை கட்டினார்.

இந்த வெற்றியின் மூலம் ஈலா கிராண்ட்ஸ்லாம் ஒற்றையரில் 4வது சுற்றுக்கு முன்னேறிய முதல் பிலிப்பைன்ஸ் நாட்டவர் என்ற பெருமையை பெற்றார்.

# உலகக்கோப்பை கால்பந்து: சுய கோலில் சாதனை



பிபா உலகக்கோப்பை கால்பந்து போட்டி தொடரில் லீக் சுற்று ஆட்டங்கள் முடிந்து நாக்அவுட் சுற்று ஆட்டங்கள் பரபரப்பாக நடந்து வருகின்றன.

இந்த நிலையில், ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் எகிப்து வீரர் முகமது ஹானியும், அர்ஜென்டினாவுக்கு எதிரான ஆட்டத்தில் கேப் வெர்டே வீரர் டினே போர் கெஸ்சும் சுய கோல் போட்டனர்.

இதன் மூலம் நடப்பு உலகக் கோப்பை யில் விழுந்த சுய கோல்க ளின் எண்ணிக்கை14ஆகஉயர்ந்தது.உலகக்கோப்பைதொடர்ஒன்றில்அடிக்கப்பட்ட அதிகபட்ச சுய கோல்கள் இது தான். இதற்கு முன்பு 2018ம் ஆண்டு உலகக் கோப்பை போட்டி தொடரில் 12 கோல்கள் அடித்ததே அதி கபட்சமாக இருந்தது. அந்த சாதனை தகர்ந்தது.

# உலகக்கோப்பை கால்பந்து: சுய கோலில் சாதனை

பாகிஸ்தான் அணிக்கு மீண்டும் கேப்டனாக பாபர் அசாம் நியமனம்

வெஸ்ட் இண்டீஸ் சுற்றுப்பயணத்திற்காக 16 பேர் கொண்ட அணியும், இங்கிலாந்து தொடருக்காக 17 பேர் கொண்ட அணியும் அறிவிக்கப்பட்டுள்ளன. உடல் தகுதியைப் பொறுத்து, இங்கிலாந்துக்கான அணியில் சவுத் ஷகீல் (Saud Shakeel) சேர்க்கப்பட்டுள்ளார்.

தேர்வுக் குழுவினர் இதுவரை சர்வதேசப் போட்டிகளில் விளையாடாத நான்கு புதிய வீரர்களுக்கும் அணியில் வாய்ப்பளித்துள்ளனர். டெஸ்ட் அணியில் புதிய திறமையாளர்களை இணைக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, இடது கை சுழற்பந்து வீச்சாளர் அலி உஸ்மான், வலது கை பேட்ஸ்மேன் முகமது அவாய்ஸ் ஜாபர், வலது கை வேகப்பந்து வீச்சாளர் உபைத் ஷா மற்றும் விக்கெட் கீப்பர்பேட்ஸ்மேன் முகமது காசி கோரி ஆகியோர் இந்த அணிகளில் இடம்பெற்றுள்ளனர்.

பாபர் மீண்டும் கேப்டனாக நியமிக்கப்பட்டது பாகிஸ்தான் அணியின் கேப்டன்சி வரலாற்றில் ஒரு முக்கிய மாற்றத்தைக் குறிக்கிறது. இந்தியாவில் நடைபெற்ற ஐசிசி ஆடவர் கிரிக்கெட் உலகக் கோப்பையில் பாகிஸ்தான் அணி குரூப் சுற்றிலேயே வெளியேறியதைத் தொடர்ந்து, 31 வயதான இவர் 2023 நவம்பரில் அனைத்து விதமான கிரிக்கெட் போட்டிகளிலிருந்தும் கேப்டன் பதவியை ராஜினாமா செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பாபர் அசாம் (கேப்டன்), அமீர் ஜமால், அப்துல்லா ஃபசல், அலி உஸ்மான், அசான் அவாய்ஸ், இமாம் உல் ஹக், குர்ரம் ஷாஜாத், முகமது அப்பாஸ், முகமது அலி, முகமது ரிஸ்வான் (விக்கெட் கீப்பர்), முகமது கஃபர்ஹோ, ஜாபர்ஹோசிக் அவாய்ஸ் சஜித் கான், சல்மான் அலி ஆகா, ஷான் மசூத் மற்றும் உபைத் ஷா

பாபர் அசாம் (கேப்டன்), அமீர் ஜமால், அப்துல்லா ஃபசல், அலி உஸ்மான், அஸான் அவாய்ஸ், இமாம் உல் ஹக், குர்ரம் ஷாஜாத், முகமது அப்பாஸ், முகமது அலி, முகமது ரிஸ்வான் (விக்கெட் கீப்பர்), முஹம்மது அவாய்ஸ் ஜாபர், முஹம்மத் அவாய்ஸ் ஜாபர், ஜிபர்வஹெர் ஹோ, ஜிபர்வ்ஹாசி அலி ஆகா, சவுத் ஷகீல் (உடற்தகுதிக்கு உட்பட்டு), ஷான் மசூத் மற்றும் உபைத் ஷா

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.